மாலை முரசு

பக்கங்கள் 20+3

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 24 ஞாயிற்றுக்கிழமை 08.03.2026 | அதிர்வு 221

## மத்திய கிழக்குப் போரில் 4 இலங்கையர்கள் காயம்

### பிரதி அமைச்சர் தகவல்



மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்ற நிலைமை காரணமாக நான்கு இலங்கையர்கள்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இலங்கையை விழுங்கும் உலகப் போர் நெருப்பு!

## இந்திய ஊடகத்தில் சஜித் பகீர் எச்சரிக்கை



அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான மோதல் இலங்கைக் கடற்பரப்பு வரை வியாபித்துள்ள நிலையில், இது இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு ஈடுகட்ட முடியாத பேரழிவை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இந்த அபாய அறிவிப்பை விடுத்துள்ளார்.

அவரது உரையின் முக்கிய சாராம்சம் வருமாறு:-

சர்வதேச கடற்பரப்பில் ஈரானியப் போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை மற்றும் மற்றொரு கப்பல் இலங்கையில் தஞ்சமடைந்துள்ளமை என்பன, இலங்கையை அறியாமலேயே இந்த உலகளாவிய மோதலுக்குள் இழுத்து விட்டுள்ளது என்று சஜித் சுட்டிக்காட்டியுள்ளார்.

02 ▶

# ‘ஐரிஸ் டெனா’ கப்பலில் மீட்கப்பட்ட 22 பேர் வெலிசறை கடற்படைத் தளத்துக்கு மாற்றம்

## பலத்த பாதுகாப்புடன் நள்ளிரவில் அதிரடி நடவடிக்கை



அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட ஈரானின் ‘ஐரிஸ் டெனா’ போர்க்கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 22 மாலுமிகள், நேற்று நள்ளிரவு பலத்த பாதுகாப்புடன் வெலிசறை கடற்படைத் தளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காலி கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட்ட 32 மாலுமிகள் காலி போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 22 பேரே இவ்வாறு சிகிச்சை முடித்து வெளியேறியுள்ளனர்.

வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய மேற்படி 22 மாலுமிகளும், நேற்று நள்ளிரவு பொலிஸார் மற்றும் கடற்படையினரின் விசேட பாதுகாப்பு வலயத்துக்குள் வெலிசறை கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சர்வதேச ரீதியில் இந்தப் போர் விவகாரம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த இடமாற்ற நடவடிக்கையானது மிகவும் இரகசியமாகவும் தீவிர பாதுகாப்புடனும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீதமுள்ள ஏனைய மாலுமிகள் வைத்தியசாலையில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் சஜீவ விஜேவீர காலமானார்!

## இன்று மாலை இறுதிச்சடங்கு



சிரேஷ்ட ஊடகவியலாளர் சஜீவ விஜேவீர அவர்கள் தனது 51ஆவது வயதில் காலமானார்.

கடந்த சில நாள்களாக நோய்வாய்ப் பட்டிருந்த அவர், காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இயற்கை எய்தியுள்ளார்.

ஊடகத்துறையில் நீண்டகால அனுபவமிக்க அவர், தனது காத்திரமான பங்களிப்பின் மூலம் பலராலும் மதிக் கப்பட்ட ஒரு ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பூதவுடல் தற்போது காலியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிச்சடங்குகள் இன்று மாலை 6 மணிக்கு காலி, ததல்ல மயானத்தில் நடைபெறும் என்று குடும்பத்தினர் அறி வித்துள்ளனர்.

அன்னாரின் மறைவுக்கு ஊடக அமைப்புகள் மற்றும் அரசியல் பிரமுகர் கள் பலரும் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.

### நாடு தழுவிய ரீதியில் பொலிஸாரின் வேட்டை:

# 26 ஆயிரம் பேரிடம் அதிரடிச் சோதனை! நூற்றுக்கணக்கானோர் சிக்கினார்கள்!!

நாடளாவிய ரீதியில் நேற்று சனிக் கிழமை பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

அத்துடன், 26 ஆயிரத்து 895 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள துடன், 15 பேர் குற்றங்களுடன் தொடர் புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்



பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 236 பேரும், திறந்த பிடியாணைகளுக் கமைய 109 பேரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 282 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 56 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 160 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள னர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மத்திய கிழக்கு...

காயமடைந்துள்ளனர் என்று வெளி விவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

காயமடைந்த நால்வரும் சிகிச்சை களின் பின்னர் தற்போது வைத்திய சாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்புக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளதோடு, தூதரகங்கள் ஊடாக அவர்களின் நிலைமைகள் குறித்துத் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடனான ஈரானின் இராணுவ மோதல்கள் தொடர்ந் தும் நீடித்து வருகின்றன. அண்டை நாடுகள் மீது இனி தாக்குதல் நடத்தப்போவ தில்லை எனவும், இதுவரை நடத்திய தாக்குதல்களுக்காக மன்னிப்புக் கோருவதாகவும் ஈரான் ஜனாதிபதி அறிவித்திருந்த போதிலும், கள நிலைவரம் வேறாகக் காணப்படுகின்றது.

ஈரானியப் படைகள் தொடர்ந்தும் குவைத், கத்தார், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளின் மீது தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில், வான் பாதுகாப்பு அமைப்பால் சுட்டு வீழ்த்தப்பட்ட ட்ரோன் ஒன்றின் பாகங்கள் வீழ்ந்ததில், பாகிஸ்தான் நாட் டைச் சேர்ந்த சாரதி ஒருவர் உயிரிழந்துள் ளமை சர்வதேச ஊடகங்கள் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு அபாயகரமான சூழலில், வளைகுடா நாடுகளில் பணி யாற்றும் இலங்கையர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவு றுத்தப்பட்டுள்ளனர்.

### இலங்கையை விழுங்கும்...

“இந்தியப் பெருங்கடல் என்பது எக்காலத்திலும் ஒரு அமைதி வலயமே. அது வல்லரசுகளின் இராணுவ மோதல் களுக்கான களமாக மாறுவதை எவ்விதத் திலும் அனுமதிக்க முடியாது. ஏற்கனவே பொருளாதார ரீதியாகச் சிதைந்து போயுள்ள இலங்கை, இவ்வாறானதொரு போர் விரிவாக்கத்தைத் தாங்கும் நிலை யில் இல்லை.” – என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

ஈரானிய மாலுமிகளைப் பொறுப் பேற்பது ‘மனிதாபிமானப் பொறுப்பு’ என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ள நிலையில், இந்தச் சூழல் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும் சர்வதேச உறவுகளுக்கும் பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் எச்சரித்துள்ளார்.

மத்திய கிழக்கில் பற்றி எரியும் போர் நெருப்பு இப்போது இந்தியப் பெருங்கடல் வழியாக இலங்கை மக்களின் வாழ்வாதாரத்திலும் நேரடித் தாக்கத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. இந்தச் சீரற்ற போர்முறையை அனைத்துத் தரப்பினரும் உடனடியாக நிறுத்தி, பிராந்திய அமைதியை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஈரானின் மூன்றாவது கப்பல் இந்தியாவின் கொச்சி துறை முகத்தில் தஞ்சம் புகுந்துள்ளமை, இந்தப் பிராந்தியத்தின் பதற்ற நிலை எந்தளவுக்கு உச்சத்தை எட்டியுள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது என்றும் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள் ளார்.

# ஈரான் கப்பல் விவகாரம்: அழிவைத் தடுத்த அநுர!

## சஜித் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் வாசு வலியுறுத்து



ஈரான் கப்பல் விவகாரத்தில் சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எடுத்துள்ள தீர்மானங்கள் மற்றும் நெருக்கடி முகாமைத்துவமானது வரவேற்கத்தக்கது என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணியின் காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“உலக அரசியல் தற்போது பற்றி எரிகின்றது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் இணைந்து முழு உலகின் அமைதிக்கும் எதிராகச் செயற்படுகின்றார்கள்.

இந்தியாவில் இராணுவப் பயிற்சிக்காகச் சென்ற ஈரான் கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியமை அதன் கோழைத்தனமான போக்கை வெளிப்படுத்துகின்றது. இது சர்வதேச மட்டத்தில் இந்தியாவின் மீதும் சில விமர்சனங்களை எழுப்பியுள்ளது.” – என்றார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுடன் “சோபா“ ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட எடுத்த முயற்சி குறித்தும் இதன்போது அவர் எச்சரித்தார். அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தால், இலங்கை இன்று நேரடிப் போர் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“தற்போதைய இக்கட்டான சூழலில், ஈரான் கப்பல் விவகாரத்தை ஜனாதிபதி சர்வதேச சட்டங்களுக்கு அமையக் கையாண்டுள்ள விதம் பாராட்டத்தக்கது. இதனை அரசியல் இலாபத்திற்காக எதிர்க்கட்சிகள் பயன்படுத்தக் கூடாது. நிலைமையின் பாரதூரத்தை உணர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது பதவிக்கு ஏற்றாற்போல் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.” – என்றும் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தினார்.



# மட்டக்களப்பில் காட்டு யானை தாக்கி தோட்டத் தொழிலாளி பரிதாப மரணம்!

மட்டக்களப்பு, செங்கலடி – பதுளை வீதியில் அமைந்துள்ள சின்னப்புல்லுமலை கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் 59 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், மட்டக்களப்பு, நொச்சிமுனைப் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் அரிச்சந்திரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:–

சின்னப்புல்லுமலை கிராமத்திலுள்ள தோட்டம் ஒன்றில் தங்கி வேலை செய்து வந்த மேற்படி நபர், வழமை போல் நேற்று இரவு தோட்டத்திலுள்ள வாடியில் உறங்கிக் கொண்டிருந்தார். இதன்போது அங்கு வந்த காட்டு யானை வாடியை உடைத்துத் தாக்கியுள்ளது.

உறக்கத்திலிருந்து விழித்த அவர், வாடியிலிருந்து தப்பி ஓட முயன்றபோது யானை அவரைத் துரத்திச் சென்று தாக்கியுள்ளது. யானை அவரது முகத்தில் காலால் மிதித்ததில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ். நசீர் வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேயிலை ஏற்றுமதி பாதிப்பு

நாம் விரும்பாத ஒரு சூழலுக்கு மத்தியிலும், நாடு ஒருவித போர் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்குப் போர் தொடர்பில் அதுதான் உண்மை நிலைவரம். நாம் சம்பந்தப்படாத போரினால் நாம் பாதிக்கப்படும் இக்கட்டு. இந்த நெருக்கடியிலிருந்து இலங்கை எப்படி மீண்டெழுப் போகின்றது என்பதுதான் கேள்வி.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் பிரதான வருமானமான தேயிலைத் துறை கடும் சரிவைச் சந்தித்து வருவதாக இலங்கைத்தேயிலைதொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனெல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியால் இலங்கையின் தேயிலைத் தொழில் கடுமையான இடையூறுகளை எதிர்கொள்கிறது. ஏற்றுமதியாளர்கள் வாரத்திற்கு 10 மில்லியன் டொலர் முதல் 15 மில்லியன் டொலர் வரை வருவாய் இழப்புகளை மதிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் 52 வீதமானவை மத்திய கிழக்குக்கே செல்கின்றன. அதிலிருந்து ஈரானுக்கு 10 முதல் 15 வீதத்திற்கும் அதிகமான அளவு செல்கிறது. அந்த நாட்டிற்குத்தான் இலங்கை அதிக விலையுடைய தேயிலையையே அனுப்புகின்றது. இப்போது அந்த ஏற்றுமதி முழுமையாகத் தடைப்பட்டு விட்டது.

மேலும் அங்கு மேற்கொள்ளப்படும் விநியோகத்தில் பெரும்பகுதி நாட்டின் குறைந்த விளைச்சல் கொண்ட தேயிலை உற்பத்தி செய்யும் பகுதிகளிலிருந்து வருகிறது, அவை பெரும்பாலும் சிறு விவசாயிகளால் பயிரிடப்படுகின்றன.

ஆக, இந்த ஏற்றுமதிப் பின்னடைவால் சிறு தேயிலைத் தோட்ட உற்பத்தியாளர்களே அதிகம் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஈரானுக்கு அப்பால் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்குமான கடல் மார்க்கங்கள் தடைப்பட்டுள்ளமையால் அந்த நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதியிலும் பெரும் பிரச்சினைகள், பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் 5 லட்சம் பேர் சிறு தேயிலை தோட்ட வருமானத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர். இத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு சுமார் 2 மில்லியன் பேரின் வாழ்வும் உள்ளது. மத்திய கிழக்குப் போர் அவர்களை நடுவீதிக்குக் கொண்டு வரப் போகின்றது.

நாட்டில் மிக மோசமான பின்னடைவு நிலையில் இருப்பவர்கள் மலையக மக்கள்தான்.

நாட்டின் தேயிலை வர்த்தகத்தில் அல்லது ஏற்றுமதியில் பாதிப்பு என்பது நேரடியாக முதலில் தாக்கப் போவது அவர்களைத்தான்.

உலகின் எங்கோ ஒரு பகுதியில் வெடித்த யுத்தம் கடைசியில் மலையக மக்களின் வயிற்றில் அடிக்கப் போவதுதான் விநோத உலகியல் நியதியாக இருக்கின்றது.

## காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் வழக்கு:

# கோட்டாவின் சாட்சியம் தொடர்பில் ஏப்ரல் 28ஆம் திகதியன்று கட்டளை!



காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், கோட்டாபய ராஜபக்ஷவின் சாட்சியத்தை எத்தகைய முறையில் பெறுவது என்பது தொடர்பான கட்டளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டு, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அறிக்கையிடப்பட்டது. அத்துடன், லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் விசாரணைகள் ஆரம்பமாகின. கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரும் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது, கோட்டாபய ராஜபக்ஷ மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னால் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சாட்சியம் வழங்க முடியாது என்று கோட்டாபய ராஜபக்ஷ மறுத்து வந்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாதெனில் அது தொடர்பில் சத்தியக் கடதாசியை வழங்குமாறு கோட்டாபய ராஜபக்ஷ தரப்புக்கு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது. இதற்கமைய கோட்டாபய சத்தியக் கடதாசியை தாக்கல் செய்திருந்த நிலையில், இரு தரப்பையும் எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றம் கடந்த தவணையின்போது அறிவுறுத்தல் வழங்கியது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, இந்த எழுத்துமூல சமர்ப்பணங்கள் தொடர்பான கட்டளை ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

லலித், குகன் தரப்பினரின் சார்பில் சட்டத்தரணிகளான எஸ்.கே.புரந்திரன், லக்சயன் ஆகியோரும், கோட்டாபயவின் தரப்பில் சட்டத்தரணி சுரங்க பெரேராவும் முன்னிலையாகியிருந்தனர்.

# வவுனியாவில் நடுவீதியில் வாள்வெட்டு! வானில் வந்த கும்பல் அதிரடி தாக்குதல்!!

## இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



**(கி.வசந்தன்)**

வவுனியா பூந்தோட்டம் சந்தியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை அந்தப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரை வான் ஒன்றில் வந்த நபர்கள் வழிமறித்து வாளால் தாக்கினர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து மேற்படி இருவரும் மோட்டார் சைக்கிளை வீதியில் போட்டு விட்டுத் தப்பிச் சென்றனர்.

இதேவேளை மேற்படி நபர்களை வாகனத்தில் வந்தவர்கள் கடத்திச் செல்ல முயன்றனர் என்று கூறப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் மோட்டார் சைக்கிளைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றதுடன் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்தனர்.




## பெண்மையைப் போற்றிய கொழும்பு:

# ‘வீரவனிதையர் விருது’ விழாவில் 20 சாதனைப் பெண்களுக்கு மகுடம்

### பிரதம அதிதியாக அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பங்கேற்பு

புதிய அலை கலை வட்ட மகளிர் அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘வீரவனிதையர் விருது விழா’ மற்றும் சர்வதேச மகளிர் தின விசேட நிகழ்வு நேற்று சனிக்கிழமை கொழும்பில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி சரோஜா சாவித்திரி போல்ராஜ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

பிரபல தொழிலதிபர் பி.எஸ். செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழகத்திலிருந்து வருகை தந்த கவிஞர் தங்கம் மூர்த்தி, ‘தினகரன்’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், டாக்டர் கனகலட்சுமி மற்றும் காயத்ரி விக்கிரமசிங்க, எம்.யோகராஜா,

தொடர்ச்சி▼
















# ‘வீரவனிதையர் விருது’ விழாவில் 20 சாதனைப் பெண்களுக்கு மகுடம்

தொடர்ச்சி▲

ஆர்.வைத்தியமாநிதி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது, சமூகத்தின் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 20 பெண்களுக்கு ‘வீரவனிதையர் விருது’ வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

புதிய அலை கலை வட்டத்தின் நிறுவுநர் ராதாமேத்ராவின் மேற்பார்வையில் நடைபெற்ற இந்த விழாவின் ஓர் அங்கமாக இளங்கலைஞர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறின.

பெண்மையைப் போற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வில் பெருமளவிலானோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.























# ஹந்தானை தோட்டத்தில் சர்வதேச மகளிர் தின விழா

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவும், மனித அபிவிருத்தி தாபனமும், ஹந்தானை தோட்ட நிர்வாகமும் இணைந்து நடத்திய சர்வதேச பெண்கள் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஹந்தானை தோட்டத்தில் நடைபெற்றது.

இதில் மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் தலைமை இயக்குநர் "வீர வனிதையர்" விருது பெற்ற திருமதி லோகேஸ்வரி சிவப்பிரகாசம், பிரதம இணைப்பாளர் பி. ஸ்ரீகாந்த் ஆகியோர் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வை 25 இற்கும் மேற்பட்ட தொழிலாளர் அமைப்பு பெண்களும், தோட்டப் பெண்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தார்கள்.













ரி-20
இறுதிச் சமர்
இன்று இரவு
7 மணி
அஹமதாபாத் -
நரேந்திரமோடி
ஸ்டேடியம்
ICC
MEN'S T20
நேருக்கு நேர் ரி-20
விளையாடிய போட்டிகள்: 29
இந்தியா வெற்றி: 18
நியூஸிலாந்து வெற்றி: 11
இந்தியா
அணித்தலைவர் : சூர்யகுமார் யாதவ்
பலம்: துடிப்பான மட்டையாட்டம், அனுபவம்
நியூஸிலாந்து
அணித்தலைவர் : மிட்செல் சாண்டனர்
பலம்: தந்திரமான பந்துவீச்க, திட்டமிடல்

# டோனி, ரோஹித் வரிசையில் இணைவாரா சூர்யகுமார்?

## முறியடித்து தனது கணக்கைத் தொடங்குமா நியூஸிலாந்து?




ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி அஹமதாபாத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடக்கவுள்ளது.

இதில் சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்தியா - சான்ட்னர் தலைமையிலான நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன.

நடப்பு சம்பியனான இந்திய அணி 3ஆவது முறையாக ரி-20 உலகக் கிண்ணத்தை வெல்லுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்பு 2007 மற்றும் 2024களில் ரி-20 சம்பியன் பட்டம் வென்றது.

4ஆவது தடவையாக இந்திய அணி இறுதிப் போட்டியில் ஆடவுள்ளது. போட்டியை நடத்திய நாடுகள் இதுவரை சம்பியன் பட்டம் வென்றது கிடையாது. மேலும் எந்த அணியும் 3 தடவைகள் ரி- 20 உலகக் கிண்ணத்தை வென்றதும் இல்லை. இந்த இரு சாதனைகளையும் படைக்கும் ஆர்வத்தில் இந்திய அணி இருக்கிறது.

நியூஸிலாந்து அணி முதல் முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லும் வேட்கையில் இருக்கிறது. 2ஆவது தடவையாக இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளது.

இரு அணிகளும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற கடுமையாக போராடும் என்பதால் இறுதிப் போட்டி மிகவும் பரபரப்பாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

உலகக் கிண்ணங்களை வென்று கபில்தேவ் (ஒருநாள்), டோனி ஒருநாள் மற்றும் ரி-20) , ரோஹித் சர்மா (ரி-20) வழியில் சூர்ய குமார் யாதவ் இணைவாரா? என்று இந்திய ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

இந்திய அணிக்கு முதல் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர் கபில்தேவ். 1983ஆம் ஆண்டு அவர் ஒருநாள் போட்டிகளில் உலகக் கிண்ணத்தை வென்றுகொடுத்தார். அவருக்கு அடுத்தப்படியாக டோனி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றினார். 2007இல் ரி- 20 உலகக் கிண்ணத்தையும், 2011இல் ஒரு நாள் உலகக் கிண்ணத்தையும் வென்று கொடுத்தார்.

2024இல் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி ரி-20 உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998









# மாவடிப்பள்ளியில் அனைத்து வீடுகளுக்கும் நோன்பு பேரீச்சம் பழங்கள் விநியோகம்!

## பிரதேச சபை உறுப்பினர் ஹில்மி சேவை

(வி.ரி. சகாதேவராஜா)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். ஹில்மி, தான் பிறந்த மாவடிப்பள்ளி கிராமத்தில் உள்ள சகல வீடுகளுக்கும் நோன்பு பேரீச்சம் பழங்களை விநியோகம் செய்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அல்ஹாஜ் ரிஷாத் பதியுதீனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட பேரிச்சம்பழம், காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி கிராமத்தின் அனைத்து குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஹில்மி தனது ஆதரவாளர்களுடன் நேரடியாக சென்று அவற்றை வழங்கினார்.

# சாளம்பைக்கேணி முஸ்லிம்களுக்கு ரமழான் பொதிகள் வழங்கி வைப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

நாவிதன்வெளி மத்தியமுகாம் சாளம்பைக்கேணி முஸ்லிம்களுக்கு ரமழான் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. நாவிதன்வெளி பிரதேச சபையின் உப தவிசாளர் கு.புவனரூபன் தனது எட்டாவது மாதக் கொடுப்பனவில் இருந்து ரமழான் நோன்பு பொதிகளை வழங்கினார்.

தற்போது நோன்பு காலம் என்பதால் நாவிதன்வெளி சாளம்பைக்கேணி கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு இவை வழங்கி வைக்கப்பட்டன.

அவர் தனது கொடுப்பனவுகளை மக்களுக்காகவே வழங்கி வருகிறார்.





# நச்சுப் பொருள்களை ஒழிப்பது சம்பந்தமாக அரச உத்தியோகத்தர்களுக்குச் செயலமர்வு!

(சர்ஜூன் லாபீர்)

நச்சுப் பொருள்களை ஒழிப்பதற்கான "தேசிய ஒன்றிணைவு இயக்கம்" தேசிய திட்டம் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல் செயலமர்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக போதைப்பொருள்தடுப்புசிகிச்சைஅழிப்பு மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே.எம்.இக்ராமின் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம வளவாளராக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடகிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளரும் தேசிய வளவாளருமான எம்.எம்.ஜி.பி.எம். ரசாட் கலந்து கொண்டார்.

வளவாளர் ரசாட் உரையாற்றுகையில்,

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு, சமூகப் பாதுகாப்பு மற்றும் இளைஞர் தலைமுறையின் எதிர்கால நலன் குறித்து பயனுள்ள விளக்கங்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டதோடு, களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் போதைப் பொருளில் அடிமையான மக்களை இனங்கண்டு அவர்களை சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் அரச உத்தியோகத்தர்கள் முன் வர வேண்டும்.

ஜனாதிபதியின் போதைப் பொருள் ஒழிப்பு முழு நாடுமே ஒன்றாக தேசிய செயற்பாட்டுக்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கி சமூக வடு இல்லாத போதைப் பொருள் அற்ற சமூகத்தை உருவாக்க அரச உத்தியோகத்தர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.– என்றார்.

இந்த நிகழ்வுக்கு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டபிள்யூ.ஏ.என். பிரதிப் குமார, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் போதைப் பொருள் ஒழிப்பு துண்டு பிரசுரம் உத்தியோகத்தர்களுக்கு அதிதிகளால் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சரோஜா திட்டம் ஊடாக சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்!

(பாறுக் ஷிஹான்)

சரோஜா திட்டம் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாறை பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக அம்பாறை பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்ல, அம்பாறை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரியாராச்சி, அம்பாறை உதவி பொலிஸ் மா அதிபர் 1 சம்பத் விக்ரமரத்ன, பொத்துவில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபுல் குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலில் அதிதிகள் வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றல் நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து சமய அனுஷ்டானங்களுடன் நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வின் நொக்கம் தொடர்பில் அம்பாறை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரியாராச்சி உரையாற்றினார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வு, உபகரணம் வழங்கல் என்பன இடம்பெற்றன.












# விவேகாந்தபுரம் கிராமத்துக்கு அகின் பவுண்டேசன் உதவிகள்

**(ஜதுர்சயன்)**

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப்பிரதேசத்துக்குஉட்பட்டவிவேகாந்த புரம் கிராமத்தில் அகின் பவுண்டேசன் எனும் அமைப்பு கடந்த 4 வருடங்களாக அங்கிராமத்திலுள்ள பல குறைகளை நிவர்த்தி செய்து அங்குள்ள மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கற்றல் கற்பித்தல் உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த நிகழ்வில் அகில் பவுண் டேசன் நிறுவனத்தின் இஸ்தாபகர் கோபாலகிருஷ்னண், அந்த நிறுவனத் தின் இலங்கைக்கான பணிப்பாளர் வி.ஆர்.மகேந்திரன், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத் திரன், கிராமசேவை உத்தியோகத்தர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

இதன்போது அந்தக் கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் அரிசி வழங்கப் பட்டது. முதியவர்களுக்கு ஆடைகள், வாழ்வாதாரத்துக்கு உரிய நிதி உதவிகள், பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நிதி உதவிகள், பாட சாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்டவை வழங்கி வைக் கப்பட்டன.

லண்டன் வோள்தஸ்ரோ ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அகிலன் பவுண்டேஷன் நிறுவனத்தால் கடந்த நான்கு வருடங் களாக அந்தக் கிராமத்தில் கல்வி, வாழ்வாதாரம், அக்கிராமத்திலுள்ள நூலகத்துக்கான நூல்கள், அறநெறிப் பாடசாலைக்கு உரிய உதவிகள், குடி தண்ணீர் கிணறு அமைத்துக் கொடுத் தல் என ஏராளமான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

தமது அமைப்பு நான்கு வருடங்களாக இக்கிராமத்தில் பல சேவைகளைச் செய்து வந்துள்ளது. இன்றுடன் எமது செய்பாடு இக்கிராமத்தில் முடிவுறுத் தப்பட்டு இன்னுமொரு கிராமத்துக்குச் செல்கின்றோம். எனினும் இங்குள்ள மக்கள் ஏதாவது தேவை ஏற்படின் எம்மைத் தொடர்பு கொள்ளலாம் என இதன்போது அகிலன் பவுண்டேசன் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பா ளர் வி.ஆர்.மகேந்திரன் தெரிவித்தார்.





# தோப்பூர் பிரதேசத்தில் பெரும்போக அறுவடை!

(தோப்பூர் எம்.எம்.நௌபீக்)

தோப்பூர் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. அதிகளவான விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகமாக கிடைத்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல்களின் விளைச்சல் ஒப்பீட்டளவில் குறைவாக கிடைக்கப்பெற்றுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர்.

விளைச்சல் குறைவாக கிடைக்கப் பெற்ற விவசாயிகளில் பெரும்பான்மையானோருக்கு வெள்ள அழிவின் போது 50 வீத பாதிப்பு வழங்கப்பட்டது என்றும் இன்னும் அனர்த்த பாதிப்பு நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கீரிச் சம்பா நெல்லின் விலை என்றுமில்லாத அளவுக்கு மூடை ஒன்று பத்தாயிரம் ரூபாவுக்கு வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றமையால் அரசுக்கு விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் மாணவி அக்ஷராவின் நடன அரங்கேற்றம்

(பாறுக் ஷிஹான்)

கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் மாணவி அக் ஷராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

கல்முனை மரிய தெரேசியாஸ் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிகளவானோர் பங்கேற்றனர்.

அக்ஷரா, நிருத்திய ஷேத்ரா நாட்டியப் பள்ளி அதிபர் மாதுமையாள் வரதராஜனின் மாணவியும் மதுசூதனன் தம்பதியரின் புதல்வியுமாவார்.

கிழக்கு பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் பாலசுகுமார் பிரதம அதிதியாக நிகழ்வில் கலந்து கொண்டார்.










# சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஊடாக 3 ஆயிரம் தென்னம்பிள்ளைகள் வழங்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக, தென்னை பயிர்செய்கை சபையால் 3 ஆயிரம் தென்னம்பிள்ளைகள் தென்மராட்சி கலைமன்றத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

தென்னம்பிள்ளைகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் சத்தியசோதி, லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் பத்மநாதன், உப மாவட்ட ஆளுநர் உதயசூரியன், வட மாகாண தென்னை பயிர்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் ரி.வைகுந்தன் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது களஞ்சியப்படுத்தப்பட்ட உணவுகள் அழிப்பு





(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த வாரம் பொது மக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் மற்று பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நகரசபை சுகாதார பரிசோதகர் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது காலாவதியான உணவுப் பொருள்களைக் காட்சி படுத்தியமை, அழுகிய மரக்கறி, பழங்கள் காட்சி படுத்தியிருந்தமை, உணவு பொருள்களை உரிய வகையில் களஞ்சியப்படுத்தாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வர்த்தக நிலையத்தின் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் வர்த்தக நிலையத்துக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அந்த உணவுப் பொருள்களையும் உடனடியாக அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நகரசபை சுகாதார பரிசோதகர் மற்றும் நகரசபை ஊழியர்கள் இணைந்து குறித்த உணவு பொருள்களை மீண்டும் எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத வகையில் அழித்தனர்.

இதன்போது 13 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டன. மன்னார் சுகாதாரத்துறை தொடர்ச்சியாக இவ்வாறான நடைமுறைகளை மேற்கொண்டதுடன் தொடர்ச்சியாக உணவகங்களின் சுகாதாரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# திருகோணமலை ஊடகர்களுக்கு நோன்புக் கால உணவுப் பொதி!

(அபு அலா)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டுத் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு ரமழான் நோன்பு கால உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலால், நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த நோன்புக் கால உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பொதிகளை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளரும் இன்னாள் உறுப்பினருமாகிய ஏ.எல். எம்.நௌபர் வழங்கி வைத்தார்.

# தலவாக்கலையில் இடம்பெற்ற தவக்கால இறை ஒப்புரவு தியானம்



(கொட்டகலை நிருபர்)

இறை ஒப்புரவு தியானமும் குணமளிக்கும் வழிபாடும் தலவாக்கலை புனித பத்திரிசியார் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜேசுதாசன் அடிகளார் மற்றும் உதவி பங்குத்தந்தை ரன்ஜித லக்ஷான் ஆகியோரது வழிநடத்தலின் கீழ் முன்னாள் இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இது நடைபெற்றது.

இந்த நிகழ்வில், திருகோணமலை மறைமாவட்டக் குரு முதல்வர் அருட் கலாநிதி போல் றொபின்சன் அடிகளார் தவக்கால இறை ஒப்புரவு தியானத்தையும் சுமளிக்கும் வழிபாட்டையும் சி வழி நடத்தியமை குறிப்பிடத்தக்கது.



இவ் இறை ஒப்புரவு தியான நிகழ்வுக்கு மலையகத்தின் பல பகுதியிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். திருகோணமலை மறைமாவட்ட குரு முதல்வர் அருட் கலாநிதி போல் றொபின்சன் அடிகளார் ஆலய பங்குத்தந்தை மற்றும் ஏற்பாட்டுக் குழுவினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# ரமழான் பெருநாள் தினத்துக்கு முன்னர் அரச ஊழியர்களின் சம்பளம் வழங்குக!

## இலங்கை ஜனநாயக முன்னணி கட்சி வேண்டுகோள்




(அபு அலா)

புனித ரமழான் நோன்புப் பெருநாள் எதிர்வரும் 21 ஆம் திகதி வருகின்றது. இந்த நிலையில் அரச ஊழியர்களின் சம்பளத்தை, சம்பள தினத்துக்கு முன்னதாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஜனநாயக முன்னணி கட்சியின் தலைவர் ஏ.பி.கமால்டீன் அரசை கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைமுறை ஆண்டுக்கான நாள்காட்டியின் பிரகாரம், நோன்புப் பெருநாள் இம்மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இஸ்லாமிய மார்க்க முறைப்படி பெருநாள் தினம் பிறை தென்படுவதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், ஆசிரியர்களின் சம்பளம் 20 ஆம் திகதியும் ஏனைய அரச ஊழியர்களின் சம்பளம் 24 ஆம் திகதி வழங்கப்படுகின்றன. புனித ரமழான் நோன்புப் பெருநாள் சம்பள தினத்துக்கு முன்னர் வருவதால் ஆசிரியர்களும், ஏனைய அரச ஊழியர்களும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தமிழ் சிங்கள புத்தாண்டை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக, அரச ஊழியர்களின் அந்த மாத சம்பளம் முன்கூட்டியே வழங்கப்படுகிறது. அதேபோன்று புனித ரமழான் நோன்பு காலத்திலும் அரச ஊழியர்களின் சம்பளத்தை முன்கூட்டி வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களையும் அரவணைத்துச் செல்லும் ஒருவராக இருப்பதால் முஸ்லிம் அரச ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் ரமழான் கால மாத சம்பளத்தை பெருநாள் தினத்துக்கு முன்னதாக வழங்கி வைக்க வேண்டுமென இலங்கை ஜனநாயக முன்னணி கட்சி ஜனாதிபதியையும், அரசையும் கேட்டுக்கொள்கிறது.- என்றார்.

# பனைமரம் கடத்திய மூன்று பேர் வெற்றிலைக்கேணியில் கைது!

(பூ.லின்ரன்)

வெற்றிலைக்கேணியில் பனைமரம் கடத்திய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பகுதியில் அதிகளவான பனை மரத்தை கடத்த முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் அழிக்கப்பட்டு வெளி இடங்களுக்கு பனைமரங்கள் அதிகளவாக கடத்தப்படுகின்றன என்று மருதங்கேணி பொலிஸாருக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனடிப்படையில் விசாரணையை மேற்கொண்டிருந்த பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து இந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

சுற்றிவளைப்பில் அனுமதிப் பத்திரம் இன்றி பனை மரத்தைக் கடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்ட பனை மரங்களை மீட்டதுடன் அதனுடன் தொடர்புடைய மூவரையும் மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளனர்.



# கைதடி கூட்டுறவு எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் தாங்கியை அமைக்குக!

## வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை

(த.சுபேசன்)

கைதடி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் தாங்கி அமைக்காக வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் தமது ஊடக அறிக்கையில்,

கைதடிச் சந்தியில் அமைந்துள்ள தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய மண்ணெண்ணெய் தாங்கி பலமுறை திருத்தம் செய்யப்பட்ட போதும் அது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

பல ஆண்டுகளாக கைதடி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணையை பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலைமை நீடித்து வருகின்றது. தற்போது யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள சூழலில், குறிப்பாக தென்மராட்சி மேற்கு பகுதியில் விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் அதிகம் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு விரைவாக விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பயன்பெறக்கூடிய வகையில் புதிய மண்ணெண்ணை தாங்கி மற்றும் அதற்கு தேவையான டியிட்டல் மீற்றர் பம்பிகள் உள்ளிட்டவை பொருத்துவதற்கு தேவையான நடவடிக்கையை வடக்கு மாகாண சபை ஊடாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கும், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் நலனுக்கும் நன்மைசெய்யும் வகையில் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று பசுந்தேசம் அமைப்பினராகிய நாங்கள் நம்புகின்றோம். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்ய எண்ணெய் இறக்குமதியில் இந்தியாவுக்கு ட்ரம்பால் பேரிடி!

## அதிக விலை கொடுத்து ரஷ்ய எண்ணெய்யை இறக்க வேண்டிய நிலை




ஈரான் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ரஷ்ய எண்ணெய் இறக்குமதிக்கு அமெரிக்காவிடம் இருந்து இந்தியா 30 நாள்கள் அவகாசம் பெற்றுள்ளது.

இந்த முறை இந்தியாவிடம் இருந்து ரஷ்யா அதிக விலை வசூலிக்கும் என்றே தகவல் வெளியாகியுள்ளது. அதாவது பெப்ரவரி மாதம் பீப்பாய் ஒன்றுக்குப் 13 டொலர் வரையில் சலுகை அளித்து வந்த ரஷ்யா தற்போது அதிக விலையில், அதாவது பீப்பாய் ஒன்றிற்கு 96 முதல் 98 டொலர் வரையில் வசூலிக்க முடிவு செய்துள்ளது.

இந்த எண்ணெய் மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத தொடக்கத்தில் இந்தியா துறைமுகங்களில் வந்து சேரும். சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டர்ஸில் வெளியான ஒரு தகவலின் அடிப்படையில், ஈரான் போர் தொடங்குவதற்கு முன்பு பெப்ரவரி 28 அன்று ஷீஊடு நிறுவனத்துக்கு இரண்டு கப்பல் எண்ணெயை பீப்பாய் ஒன்றிற்கு 13 டொலர் தள்ளுபடியில் ரஷ்யா வழங்கியுள்ளது.

தற்போது மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் சூழல் காரணமாக விநியோக நெருக்கடிக்கு மத்தியில், இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் மில்லியன் கணக்கான ரஷ்ய கச்சா எண்ணெய் சரக்குகளை உடனடியாக வாங்க முடிவு செய்துள்ளன.

இது மட்டுமின்றி, இந்தியாவுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அரச சுத்திகரிப்பு நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்ப், பாரத் பெட்ரோலியம் கார்ப், இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப் மற்றும் மங்களூர் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகியவை ரஷ்ய வர்த்தகர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இந்திய அரசு சுத்திகரிப்பு நிறுவனங்கள் இதுவரை சுமார் 20 மில்லியன் பீப்பாய் ரஷ்ய எண்ணெய்யை வர்த்தகர்களிடமிருந்து வாங்கியுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவுக்கு ரஷ்ய எண்ணெய் விற்பனையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களில் ஒருவர், இந்திய சுத்திகரிப்பு நிலையங்கள் மீண்டும் ரஷ்ய சந்தைக்கு திரும்பியுள்ளன. ஆனால் விலை அதிகம் செலுத்த வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளார்.

வியாழக்கிழமை, அமெரிக்க கருவூலத் துறை இந்தியாவிற்கு 30 நாள்கள் விலக்கு அளித்தது. இதன் மூலம் இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் கடலில் சிக்கித் தவிக்கும் ரஷ்ய எண்ணெயை வாங்க முடியும்.

உக்ரைனில் நடந்து வரும் போரின் போது, ரஷ்யாவுக்கு நிதி அளிப்பதை கட்டுப்படுத்த ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை கட்டுப்படுத்துமாறு இந்தியாவை அமெரிக்கா பல மாதங்களாக வலியுறுத்தி வந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விலக்கு ஏற்கனவே கடலில் சிக்கியுள்ள எண்ணெய்க்கு மட்டுமே பொருந்தும். இந்த நடவடிக்கை கண்டிப்பாக காலவரையறைக்கு உட்பட்டது என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஈரான் மோதல் காரணமாக ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயை வாங்குவதற்கு ஒப்புதல் கோரி இந்தியா ட்ரம்ப் நிர்வாகத்தை அணுகியது.

இந்தியாவிடம் சுமார் 25 நாள்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. மேலும் அதன் எண்ணெய் இறக்குமதியில் சுமார் 40 சதவீதம் மத்திய கிழக்கில் இருந்து ஹார்முஸ் நீரிணை வழியாகவே வருகிறது.

இந்த நிலையில், தற்போது ட்ரம்பின் அனுமதியுடன் ரஷ்யாவை நாடிய இந்தியாவுக்குச் சலுகைகள் எதுவும் வழங்கப்படாது என ரஷ்ய வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இதனால், இந்திய தரப்பு தற்போது ட்ரம்பால் அதிக விலைக்கு ரஷ்ய எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்குத் தயாராகியுள்ளது.

# இந்திய நாட்டையும் அரசமைப்பையும் அவமதித்த திரிணமூல் காங்கிரஸ்!

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு



திரிணமூல் காங்கிரஸ் அரசு நாட்டையும் அரசியலமைப்பையும் அவமதித்துள்ளது எனப் பிரதமர் மோடி தெரிவித்தது குறித்து செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் அரசு குடியரசுத் தலைவரை மட்டுமல்ல,நாட்டையும்அரசியலமைப்பையும் அவமதித்துள்ளது என்று பிரதமர் மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒரு நாள் முன்பே மேற்கு வங்கத்தில் உள்ள திரிணமூல் காங்கிரஸ் அரசு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவைக் கடுமையாக அவமதித்துள்ளது. இந்த அவமதிப்பை நாடும், பெண் சக்திகளும் ஒருபோதும் மறக்காது எனக் கடுமையாகச் சாடியுள்ளார் பிரதமர் மோடி.

மேற்கு வங்கத்தில் பழங்குடியின மக்களுக்கானச் சிறப்பு நிகழ்ச்சியொன்றில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சனிக்கிழமை கலந்துகொண்டார்.

ஆனால், அந்த நிகழ்ச்சி ஏற்கெனவே திட்டமிட்ட பகுதியில் இருந்து வேறொரு பகுதிக்கு மாற்றப்பட்டது. இந்த நிகழ்வு அரசியல் களத்தில் பேசுபொருளாக மாறிய நிலையில், இடம் மாறியதால் பெரிதாகக் கூட்டம் கூடவில்லை என்று சொல்லப்படுகின்றது.

இதனிடையே, குடியரசுத் தலைவரின் வருகையின்போது, அவரை வரவேற்க மேற்கு வங்க முதல்வரான மமதா பானர்ஜியோ அல்லது அவர் சார்பில் எந்த வொரு அமைச்சரோ செல்லவில்லை என்றும் திரிணமூல் காங்கிரஸ் அரசு மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

# பிராந்திய அமைதிக்காக போரை நிறுத்துக கட்டார், எகிப்து ஆலோசனை தெரிவிப்பு!



ஈரான் மற்றும் இஸ்ரேல், அமெரிக்கா இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், கட்டார் பிரதமர் மற்றும் வெளி விவகார அமைச்சரான ஷேக் முகமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானி, எகிப்து வெளியுறவு அமைச்சர் பத்ர் அப்தெலாட்டியுடன் தொலைபேசி வாயிலாக அவசர உரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த உரையாடலின் போது, பிராந்தியத்தில் அதிகரித்துவரும் இராணுவ மோதல்கள் குறித்தும், அதன் விளைவாக சர்வதேச பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஏற்பட்டுள்ள கடுமையான அச்சுறுத்தல்கள் குறித்தும் இரு தலைவர்களும் விரிவாக விவாதித்துள்ளனர்.

கட்டார் நாட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்த ஷேக் முகமது, வன்முறைச் செயல்களை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும், இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

போரைத் தீவிரப்படுத்துவது எதற்கும் தீர்வாகாது என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, எகிப்து வெளி விவகார அமைச்சர் அப்தெலாட்டியும், பிராந்தியத்தில் நிலவும் குழப்பமான சூழலைத் தவிர்க்கவும், மேலும் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்கவும் இராணுவநடவடிக்கைகளைக் குறைத்து, தூதரக ரீதியிலான பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# பிரித்தானியத் தளங்களைப் பயன்படுத்தி ஈரான் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்கா!

## பிரித்தானிய எம்.பி. ஸாரா சுல்தானா குற்றச்சாட்டு



அமெரிக்கா, பிரித்தானியத் தளங்களைப் பயன்படுத்தி, அமெரிக்காவின் பி-1 ரக குண்டுவீச்சு விமானங்கள், ஈரான் மீது தாக்குதல் நடத்துகிறது என்று பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸாரா சுல்தானா குற்றம் சாட்டியுள்ளார்.

இது போரில் பிரித்தானியாவின் நேரடித் தலையீட்டைக் காட்டுகிறது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

இருப்பினும், பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மர், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மட்டுமே தளங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதாகக் கூறி இந்த விமர்சனங்களை மறுத்துள்ளார்.

தற்போதைய நிலையில், ஈரான் தனது அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்தப் போவதில்லை என்று அறிவித்தாலும், அங்கிருந்து தாக்குதல் நடத்தப்பட்டால் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்துஈரானுக்குஎதிராகத்தொடங்கியுள்ள "எபிக் பியூரி" (Epic Fury) இராணுவ நடவடிக்கை இரண்டாவது வாரமாகத் தொடர்ந்து வருகிறது. ஈரானின் முக்கியத் தலைவரான அயதுல்லா கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து உலக நாடுகளிடையே பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரான் நிபந்தனையற்ற முறையில் சரணடைய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதோடு, அவ்வாறு செய்யத் தவறினால் ஈரானின் மீது மிகக் கடுமையான தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான், ஈரான் ஒருபோதும் எதற்கும் அடிபணியாது என்றும், தங்கள் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கத் தொடர்ந்து போராடுவோம் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஈரானின் கெய்ஷ்ம் தீவில் உள்ள கடல் நீரை குடிநீராக்கும் ஆலை மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை ஈரான் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தத் தாக்குதலால் சுமார் 30 கிராமங்களின் குடி தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இது ஒரு மனிதாபிமானமற்ற போர் குற்றம் என்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஈரானின் ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் இஸ்ரேல் மற்றும் வளைகுடா பிராந்தியங்களில் உள்ள இலக்குகளைத் தொடர்ந்து தாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் - 03

ஞாயிற்றுக்கிழமை 08/03/2026

**கோர விபத்தில் சிக்கிய பாடசாலை பஸ் மாணவர் உயிரிழப்பு; 17 பேர் படுகாயம்**

C2▶







# கனடாவின் ஒண்டாரியோ மாகாணத்தில் 11 பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

## தீவிர விசாரணை ஆரம்பம்

கனடாவின் ஒன்றரியோ மாகாணத்தில் உள்ள கெனோரா பகுதியில் அமைந்துள்ள சுமார் 11 பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளளன.

கடந்த 6 ஆம் திகதி காலை சுமார் 7 மணியளவில் இந்த மிரட்டல்கள் வந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரைடன் லேக் மற்றும் சியோக்ஸ் லுக்அவுட் ஆகிய நகரங்களில் உள்ள 11 பாடசாலைகளுக்கு இந்த குண்டு மிரட்டல்கள் கிடைத்தன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மிரட்டல்களைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருவதற்கு முன்பே பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் தற்காலிகமாக மூடப்பட்டன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

C2▶





## மத்திய கிழக்கில் பதற்றம்:

# நாடு கடத்தலை தற்காலிகமாக இடைநிறுத்தியது கனடா அரசு

மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலை காரணமாக லெபனான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் நாடுகடத்தல் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த தற்காலிக நடவடிக்கை நிர்வாக சிக்கல் நடைமுறையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இயற்கை பேரழிவுகள் அல்லது வன்முறை காரணமாக பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவும்

C2▶




# கோர விபத்தில் சிக்கிய பாடசாலை பஸ் மாணவர் உயிரிழப்பு; 17 பேர் படுகாயம்

கனடாவின் கியுபெக் மாகாணத்தில் பாடசாலை பஸ் கவிழ்ந்து இடம்பெற்ற கோர விபத்தில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சயின்ட் ரொஸ் டி வாட்போர்ட் என்ற சிறிய நகரில் நேற்று சனிக்கிழமை காலை சுமார் 8.30 மணியளவில் இடம்பெற்றதாக கியுபெக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குப் பின்னர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவர் ஒருவர் பின்னர் உயிரிழந்துள்ளார் என அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

இந்த விபத்தில் காயமடைந்த 17 பேரில் நான்கு மாணவர்கள் கடுமையாக காயமடைந்துள்ளனர். பஸ் சாரதியும் காயமடைந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இருப்பினும் தற்போது காயமடைந்தவர்களில் எவருடைய உயிருக்கும் ஆபத்து இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து நேர்ந்த இடத்திற்கு சென்ற அதிகாரிகள், வீதியின் ஓரத்தில் பஸ் கவிழ்ந்த நிலையில் இருந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அப்பகுதியில் நிலவிய பனிப்படர்ந்த வீதி நிலைமை இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கக்கூடும் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

---

**காடு கடத்தலை...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நாடுகளுக்கு இந்த நடைமுறை பொதுவாகப் பயன்படுத்தப்படுவது வழமையானது.

எனினும், குற்றச்செயல்கள், சர்வதேச அல்லது மனித உரிமை மீறல்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் அல்லது பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பான காரணங்களால் கனடாவுக்கு அனுமதிக்கப்படாதவர்களுக்கு இந்த தற்காலிக தடை பொருந்தாது எனவும் கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஈரான் மீது ஐக்கிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் நிலவுகிறது.

அதேசமயம் ஹிஸ்புல்லாஹ் அமைப்புடன் இஸ்ரேல் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக பெய்ரூட் நகரின் தெற்கு புறநகர் பகுதிகளுக்கு அருகில் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

நிலமை சீராகிய பின்னர் லெபனான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு நாடு கடத்தல் நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்படும் என கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் கனடாவில் அனுமதிக்கப்படாத 22,500 இற்கும் அதிகமான நபர்கள் நாடுகடத்தப்பட்டனர் எனவும் தற்போது வாரத்திற்கு சுமார் 400 பேரை நாடுகடத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

---

**கனடாவின் ஒன்டாரியோ...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பின்னர் பாடசாலை பணியாளர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து ஒவ்வொரு பாடசாலை வளாகத்திலும் உள்ளக மற்றும் வெளிப்புற பகுதிகளை முழுமையாக சோதனை செய்தனர்.

இந்த சோதனைகளின் போது எந்த வித சந்தேகப்பொருளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து ஒன்றாரியோ பொலிஸ் குற்றப்பிரிவு அதிகாரிகள், சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகங்களுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எங்கள் சமூகங்களின் பாதுகாப்பே எங்களின் முதல் முன்னுரிமை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்புக்கு ஆபத்தாக இருக்கக்கூடிய எந்த சந்தேகமான செயல்பாடுகளையும் உடனடியாக தகவல் தருமாறு பொதுமக்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வெடிகுண்டு மிரட்டல் சம்பவம் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மத்திய கிழக்கிலிருந்து வெளியேற விரும்பும் கனடியர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு




மத்திய கிழக்கு முழுவதும் தாக்குதல்கள் அதிகரித்து ஈரான் தொடர்பான போர் விரிவடைந்து வரும் நிலையில், அந்தப் பகுதியில் இருந்து வெளியேற கனடா அரசின் தூதரக உதவியை நாடும் கனேடியர்களின் எண்ணிக்கை 3,500 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மத்திய கிழக்கு பகுதியில் உள்ள சுமார் 108,000 இற்கும் அதிகமான கனேடியர்கள்வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் அமைப்பில் பதிவு செய்துள்ளனர்.

வெளியேற முடியாமல் சிக்கியுள்ள கனேடியர்களை பாதுகாப்பான நாடுகளுக்கு கொண்டு செல்ல அரசு வணிக விமானங்களில் முன்பதிவு இருக்கைகள் ஏற்பாடு செய்வதுடன் சார்ட்டர் விமானங்களையும் ஒருங்கிணைத்து வருவதாக கனடிய வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

மேலும், நிலப் போக்குவரத்தையும் ஏற்பாடு செய்து அருகிலுள்ள நாடுகளுக்கு அவர்களை கொண்டு செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கடல் வழிகள் பாதுகாப்பாக இல்லாத காரணத்தால் கப்பல்கள் மூலம் வெளியேற்றும் திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

உதவி கோரும் பெரும்பாலான கனேடியர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒன்டாரியோ முதல்வருக்கு மிரட்டல் 20 வயது இளைஞர் மீது குற்றச்சாட்டு



ஒன்டாரியோ முதல்வர் மீது மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மாகாணத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞர் மீது பொலிஸார் குற்றச்சாட்டு சுமத்தியுள்ளனர்.

ஒன்டாரியோ மாகாணத்தின் அலிஸ்டன் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் மீது, சேதம் ஏற்படுத்தும் வகையில் மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணை கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி தொடங்கப்பட்டதாகவும், ஒன்றாரியோ பொலிஸ் பாதுகாப்பு சேவைகள் பிரிவு மேற்கொண்ட விசாரணையின் பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

பின்னர் அவர் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தகவல்கள் உள்ளவர்கள் ஒன்றாரியோ பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதற்கிடையில், மிரட்டலின் தன்மை குறித்து கூடுதல் தகவல்களை வெளியிட முடியாது என ஒன்றாரியோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் நேர்மை மற்றும் எதிர்கால நீதிமன்ற நடவடிக்கைகளை பாதுகாப்பதற்காக இதுகுறித்த விவரங்கள் தற்போது வெளியிடப்படவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.